முதன்மை மாவட்ட நீதிமன்றம், தஞ்சாவூர்

OS 280/2022

நாள்: 03.09.2025

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி I.A.No.104/2025 105/2025 & 106/2025 date 17/6/2025 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு Bharatiya Sakshya Adhiniyam, 2023 சட்டத்தின் படி திரு.A.அலாவூதின், கிரேடு-1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அசோகன் | வயது | : | 55 |
| தந்தை பெயர் | : | ஜெயராம் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | தொழில் |

முதல் விசாரணை தொடர்ச்சி

1) மாரியம்மன்கோவில் வீட்டில் குடியிருக்கும் வாடகைதாரருக்கு எதிராக வாதி தாக்கல் செய்த மனுவின் நகல் பி.வா.சா.ஆ.12

2) அந்த வழக்கில் வழக்கின் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிர்உரை பி.வா.சா.ஆ.13

3) 13.4.2015 தேதியிட்ட வாதியின் மகன் பெயரில் உள்ள கிரய பத்திரத்தின் கணினி நகல் பி.வா.சா.ஆ.14

4) ஜாயிண்ட் லோன் அக்கவுண்ட் அசல் பி.வா.சா.ஆ.15

5) ஜாயிண்ட் பேங்க் பாஸ்புக் அசல் பி.வா.சா.ஆ.16

6) ஜாயிண்ட் பேங்க் பாஸ்புக் அசல் பி.வா.சா.ஆ.17

7) பேங்க் லோன் பாஸ்புக் பி.வா.சா.ஆ.18

8) வங்கிகணக்கு நகல் பி.வா.சா.ஆ.19

(பி.வா.சா-ஆ-12 முதல் 19 ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின்

நம்பகத்தன்மை மற்றும் ஏற்புதன்மை குறித்து வழக்கின் தீர்ப்பில் முடிவு செய்யப்படும் என உத்தரவிடப்படுகிறது.)

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) பி.வா.சா.ஆ. 16,17,.18 ஆகியவை 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணக்கு புத்தகம் என்றால் சரிதான்.

2) பி.வா.சா.ஆ.14 இந்த வழக்கிற்கு பிறகு நகல் வாங்கப்பட்டது என்றால் சரிதான்.

3) வாதியின் மகன் தற்சமயம் எங்கு உள்ளார் என்பதும் என்ன வேலை செய்கிறார் என்பதும் அவருக்கு திருமணம் ஆகிவிட்டதா என்பதும் எனக்கு தெரியாது.

4) என் மகள்களுக்கு திருமணம் ஆகிவிட்டது. அந்த திருமணத்திற்கு வாதியும் வாதியின் மகனும் வந்தார்கள்.

5) என் பெயரில் தனிபட்ட சொத்து இருந்தது. அந்த சொத்தை விற்றுவிட்டேன். என் பெயரில் இருந்ததால் நான் மட்டும் கையெழுத்து போட்டு கொடுத்தேன்.

6) பி.வா.சா-ஆ.12 மற்றும் 13ஐ நாகராஜன்தான் என்னிடம் கொடுத்தார்.

7) இந்த வழக்கில் நான் சாட்சியம் அளிக்கவில்லை.

8) அட்வான்ஸ் வாங்குவதற்கு வாடகை ஒப்பந்தம் கிடையாது. வாடகை வாங்குவதற்கம் ரசீது கொடுப்பது கிடையாது.

9) வாடகை இவ்வளவு தான் வருகிறது என்பதை நான் சொல்லிதான் தெரியும்.

10) நான் தாக்கல் செய்த வங்கி கணக்கு புத்தகங்களுக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. அதில் காணப்படுகிறது வரவு செலவுகள் 1ம் பிரதிவாதியின் தனிப்பட்ட வரவு செலவுகள் என்றால் இல்லை.

11) வாதி பெயரில் உள்ள மாரியம்மன்கோவில் வீடு வாதியின் தனிப்பட்ட சொத்து என்றால் இல்லை. அது கூட்டுகுடும்ப சொத்து.

12) பி.வா.சா.ஆ.14 ல் கண்டுள்ள சொத்து வாதியின் மகன் ஆடிட்டராக இருந்து அதில்இருந்து வரும்

வருமானத்தை கொண்டு வாங்கப்பட்ட வாதியின் மகனின் தனிப்பட்ட சொத்து என்றால் இல்லை.

13) வாதிக்கு உரிய பங்கை கொடுக்க கூடாது என்ற எண்ணத்தில் நானும் மற்ற பிரதிவாதிகளும் உண்மைக்கு புறம்பான தகவல்களை சொல்லி கொண்டு இருக்கிறோம் என்றால் சரியல்ல.

/உண்மை நகல்/

ஒம்/-கா.பூர்ண ஜெய ஆனந்த்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்.